செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 410 நாள்: 12/7/17

செய்திக் குறிப்பு

2016–2017ம் ஆண்டில் ஏப்ரல் 2016 முதல் மார்ச் 2017 வரையிலான காலத்திற்கு தேசிய அளவில் பதக்கம் வென்ற வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குவது தொடர்பாக விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் பெயர், முழுமுகவரி மற்றும் சான்றிதழ்களின் நகல் ஆகிய விவரங்களை உரிய படிவத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அளவில் பதக்கம் வென்ற வீரர், வீராங்கனைகளுக்குக் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு விளையாட்டு உபகரணங்கள் வாங்கி வழங்கப்படவுள்ளது என்பது இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

| Sl.No. | Medal Position | Sports Kit | Quantity |
|---|---|---|---|
| 1. | Gold Medal in the Nationals (Rs.6,000/- worth of Sports kits) | Track Suit | 1 set |
| | | T-Shirt | 2 nos. |
| | | Shorts | 2 nos. |
| | | Warm-up shoes and socks | One pair each |
| 2. | Silver Medal in the Nationals (Rs.4,000/- worth of Sports kits) | Track Suit | 1 set |
| | | T-Shirt | 1 no. |
| | | Shorts | 1 no. |
| | | Warm-up shoes and socks | One pair each |
| 3. | Bronze Medal in the Nationals (Rs.2,000/- worth of Sports kits) | Track Suit | 1 set |
| | | Warm-up shoes and socks | One pair each |

எனவே. மேற்கண்ட காலகட்டத்தில் தேசிய அளவில் பதக்கம் வென்ற வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் தங்களது பெயர், முழுமுகவரி மற்றும் சான்றிதழ்களின் நகல் ஆகிய விவரங்களை உரிய படிவத்தில் வேலூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரது அலுவலகத்தில் 25.07.2017க்குள் நேரடியாக சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான படிவம் மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களை அலுவலக நேரங்களில் 0416–2221721 அல்லது 7401703483 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர்

10-7-17

10/07/2017

செ.ம.தொ.அ. 12/7/17
வேலூர்– 9.